முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1172

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.12.2022, புதன்கிழமை

1. தர்மனாய் வாழும் அரங்கனே
   தவசியாய் உலகோர்க்கு அற்புதம் புரிகின்ற
   ஆறுமுக அரங்கமகா ஞானியே
   அப்பனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே ஞான அறிவுரை ஆசி
   உயர்வாக சுபகிருது தேள் திங்கள் உரைப்பேன்
   (சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 28 ம் நாள் 14.12.2022, புதன்கிழமை)
   ஞானவான் உந்தன் சக்திவழிதான்
   ஞானயுகமாற்றம் உலகம் கண்டடைய நேரும்
3. நேர்மைகொண்ட உன் தொண்டர்கள் வழியாகத்தான்
   நிலவுலகம் அமைதி பாதுகாப்பை பெறும்
   பெருமைமிக்க அரங்கன் தர்மத்தால்தான்
   பேருலகமே பசிபிணி இல்லாத நல்லுலகமாக
4. ஆகவே மாறி இயற்கை பலமோடு
   அகிலம் சர்வ பலமும் காணக்கூடும்
   கூடவே இந்தவித அற்புதத்தை
   குருவாக நின்று உலகுக்கு காட்டும்
5. சரவணச்சுடரேற்றி அருளும் அரங்கன்
   சர்வ ஞானமே உலகிற்கு சக்திமிக்க பாதுகாப்பாக மாறும்
   மாறவே அரங்கனைத் தொடர்ந்து உலகோர்
   மண்ணுலகில் ஞானம் பயின்று வர
6. ஆறுதலாக உலகமெங்கிலும் ஞானத்தலைமை அரங்கனால் கூடி
   ஆற்றல்பட ஞான ஆட்சிக்காலம் உதயமாகும்
   ஆகவே அரங்கனின் ஞானம்
   அகிலத்தை மாற்றும் சர்வபலமாகும்
7. யுகமக்கள் அறிந்து உணர்ந்து
   ஓங்காரக்குடில் நோக்கி வர
   வருகவே அனைவருக்கும் அழியாமை என்கின்ற மகா சக்தி
   வரமாகக் கூடி ஞானிகளாகும் வாய்ப்பு கிட்டும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–